முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கேது பகவான் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

05.02.2019, செவ்வாய்க்கிழமை

1. **யோக சித்தே கலிகாலம் தன்னில்**
**உயர் சக்தியாக வந்த தவசியே**
**யோக ஞான வாழ்வை தந்து**
**உயர் மக்களை உருவாக்கிடும் ஞானியே**

2. ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் ஒளி சூட்சும நூலை
இனிமைபட **விளம்பி கலை திங்கள்**
**இயம்பிட இருபானீர் திகதி குசன் வாரம்**
**(விளம்பி வருடம் தை மாதம் 22ம் நாள் 05.02.2019, செவ்வாய்க்கிழமை)**

3. வாரமதில் கேது பகவான் யானும்
வழங்குவேன் உலகோர் நலமுற
பாரதனில் அரங்கன் ஞானமதும்
பரவவே பசுமை வளம் காணும்

4. காணவே உண்மை ஞான வழியில்
கலியுகத்தார் பின்பற்றி வந்து
ஞானவான்கள் ஆகி உலகில்
ஞானியாகும் வரம் அடைவர்

5. அடையவே அரங்க மகானின்
அற்புத அன்னதான நெறியை
தடையற மக்கள் ஏற்றுத் தொடர
தருமம் வளர்த்து வருக

6. வருகவே கலியுக இடர்கள்
வலுவிழந்து ஓடிட நேரும்
முருகா எனும் செபதபம் பெருக
முழுமை ஞான பலமும் கூடும்

7. கூடவே அரங்கன் சீடர்களென
குறையிலா தீட்சை ஆசிபட
நாடெங்கும் சேவை ஆற்றிவர
ஞானயுகமாக மாறுமென்பேன்

8. என்கவே ஞானம் கருதியே
எல்லா திக்கும் அலையும் மக்கள்
சன்மார்க்க வழிதனை காட்டி
சரவண சோதி ஏற்றி அழைக்கும்

9. அழைக்கும் ஆறுமுக ஞானகுரு
அரங்க மகான் ஏழாம் படை வீட்டை
உலகோர் எல்லாம் அணுகி வந்து
உயர்வுபட வணங்கி தீட்சை ஆசிபெற

10. ஆசி பெற தொடர்ந்து வர
அனுதினம் செபதபம் காண
நேசமுள சைவநெறிபட வர
நிலவுலகில் தெளிவு திடம் கண்டு

11. கண்டுமே அரங்கமகான் வழி
கலியுகத்தார் அனைவரும் தடையற
தொண்டு வழி தேறி ஞானியாவர்
தொடரவே என் அருளாசி பெறுவர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் கேது பகவான் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எல்லையற்ற யோகங்களை செய்து வெற்றி கண்டிட்ட யோகசித்தனே மாமாயை சூழ் கலிகாலத்தினில் உயர் ஞான சக்தியாக முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட மகா தவசியே யோகஞான வாழ்வினைத் தந்து உயர் ஞான மக்களை உருவாக்கிடும் மகா ஞானியே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் தை மாதம் 22ம் நாள் 05.02.2019, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே கேது பகவான் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் கேது பகவான்.

உலகினில் ஆறுமுக அரங்கன் வகுத்த ஞானநெறி பரவினால், உலகமே இயற்கை வளம் மிகுந்து காணப்படும். அரங்கமகா தேசிகனார் கூறும் உண்மை ஞானவழியில் கலியுகமக்கள் பின்பற்றி அரங்கனை பின்தொடர அவர்களெல்லாம் ஞானவான்களாக ஆகி உலகினில் ஞானியாகும் வரத்தினை பெறுவார்கள்.

ஞானியாகும் வாய்ப்பினை பெற்றிட அவரவரும் அரங்கமகா தேசிகனாரின் அற்புதம்மிக்க அன்னதான நெறியினை தடையேதும் இன்றி மக்கள் ஏற்று தொடர வேண்டும். மக்கள் அன்னதானத்தினை உலகினில் தொடர்ந்து செய்திட செய்திட உலகினில் தருமம் வளர்ந்து வரும். தருமம் வளர வளர கலியுகத்தின் துன்பங்கள் எல்லாம் வலுவிழந்து ஓடிட நேரிடும். உலகினில் முருகா, முருகா, முருகா எனும் ஜெபதபங்கள் பெருகிட பெருகிட உலகினில் முழுமை ஞான பலமும் பெருகிடும்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரிடத்து தீட்சை உபதேசம் அடைந்திட்ட ஆறுமுக அரங்கமகானின் சீடர்கள் எல்லாம் நாடெங்கும் சேவைகளை செய்து வரவர, இந்த உலகமே ஞானயுகமாக மாறும் என்பேனப்பா.

ஆதலினால் உலகினில் ஞானத்தை தேடி உலகமெங்கும் பல திசைகளிலும் அலைந்து திரிந்து வாடும் மக்களுக்கு சன்மார்க்க வழியினை காட்டி சரவணஜோதிதனை ஏற்றி உலக மக்களை ஞானம் பெற அழைக்கும் முருகப்பெருமானின் அவதாரம் ஞானகுருநாதன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை பயபக்தி விசுவாசத்துடன் அணுகி வந்து அரங்கரிடத்து பயபக்தியுடன் வணங்கி ஆசி தீட்சை உபதேசம் அடைந்து அரங்கனின் கொள்கைகளை ஏற்று தொடர்ந்து வர, தினம்தினம் மறவாமல் ஞானபூஜைகளை செய்து வரவர, உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவ உணவை மேற்கொண்டு வரவர, இவ்வுலகினர் தெளிவும் திடமும் கண்டு ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் மூலமாக கலியுகத்தின் உள்ளோர் தொண்டு வழி சென்று கடைத்தேறி ஞானியாக ஆகிடுவர், தொடர்ந்து வரவர கேது பகவான் எனது ஆசியையும் பெற்று சிறப்படைவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் கேது பகவான்.

–சுபம்–